## தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - 2019

---

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2020 பெப்ரவரி 29 இல் முடிவடைந்த 14 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபை மற்றும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மே 08 ஆம் திகதிய எஸ்ஆர்ஐ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ)(ii) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. தூய மின்வலு வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சார விநியோகத்தின் வினைத்திறனையும் நம்பகத்தன்மையையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 16,595.30 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 131.50 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது, ரூபா 8,644.70 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.50 மில்லியன் மிகுதி தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளினை 2013 செப்தெம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், மேலும் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்தல் திகதி 2019 யூன் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 02 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 பெப்ரவரி 29 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பதில்கள் |
|---|---|---|---|---|
| (அ) | மேலதிகமாக பதிவுசெய்யப்பட்ட பரிமாற்ற நட்டங்கள் காரணமாக ஏடிபீ பங்களிப்பு தொடர்பாக 2020 பெப்ரவரி 29 இல் உள்ளவாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் காட்டப்பட்ட மீதிக்கும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கும் இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நடைமுறை 1. வேலை மற்றும் கடன் தொகை என்பன நிதிக்கூற்றில் அதிகரித்துக் காட்டப்பட்டன. | விடய இல. 3,4,5,9,10,11 இன் கீழ் குறிப்பிடப்பட்ட பணவளிப்புக்கள் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் ஈஆர்டி கூற்றுக்களில் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க பணவளிப்புக்கள் கொடுக்கல் வாங்கல் கள விகிதத்தில் (spot rate) கணக்குகளில் நாளது வரையாக்கப்பட்டிருந்தன. கணக்கீட்டிற்காக பயன்படுத்தப்பட்ட விகிதம் மற்றும் ஈஆர்டி விகிதத்திற்கிடையேயான பரிமாற்ற விகித வேறுபாடு சரியாக இனங்காணப்பட்டு 2020 யூன் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க கடன் மீதிகள் நாளது வரையாக்கப்பட்டிருந்தன. | பரிமாற்ற விகித வேறுபாடு கொடுக்கல் வாங்கல் திகதியில் இனங்காணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2. விடய இல. 6, 7, 8 இன் கீழ் குறிப்பிடப்பட்ட பணவளிப்புக்கள் தனிக் கொடுப்பனவு சான்றிதழுடன் தொடர்புபட்டுள்ளன. ஆனால் மூன்று சந்தர்ப்பங்களில் இரண்டு கடன் இலக்கங்களின் கீழ் பணவளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி மூன்று வேறுபாடுகளினதும் தேறியது பூச்சியமாகும். | |
| (ஆ) | செயற்திட்டத்தின் பகுதி 01 (இற்காக 3483 ஆம் இலக்க கடனின் கீழ் ஒப்பந்ததாரரிற்குச் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல் (லொட் அ) செயற்திட்ட நிதிக்கூற்றுக்களின் 2.1 ஆம் இலக்க குறிப்பின் தேவைப்பாட்டின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலை தொகை குறைத்துக் காட்டப்படுதல் | 2020 பெப்ரவரி 28 வரையான காலப்பகுதியை மேவுகை செய்து 2892/2893 ஆம் இலக்க கடனிற்கான நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்ட செலுத்தவேண்டியவைகள் கணக்கீட்டு காலப்பகுதிக்கு உரியதாக காணப்பட்ட போதிலும் இம் மீதிகள் பின்வருவன காரணமாக 2892/2893 ஆம் இலக்க கடனின் கீழ் செலுத்த வேண்டியவையாக எடுக்கப்பட முடியாதிருந்தது.<br>- 2892/2893 ஆம் இலக்க கடனின் கணக்கு மூடுதல் 2020 பெப்ரவரி 28 ஆக காணப்பட்டமை.<br>- 3483 ஆம் இலக்க கடனிலிருந்து இம் மீதிகளிற்கு தொடர்ச்சியான கொடுப்பனவு காணப்பட்டமை. | காலத்திற்குரிய கிரயம் பதிவு செய்யப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் 07 பகுதிகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 07 பகுதிகளில் செயற்திட்டத்தின் பகுதி 01 தொடக்கம் 04 வரை அமுல்ப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| வேலைப் பொதிகள் | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பதில்கள் |
|---|---|---|---|---|
| ------------- | -------------------- | -------------------- | --------------------- | --------------------------- |
| பொதி 2 – லொட் இ | துல்ஹிரிய – கேகாலை, பொல்பிட்டிய – புதிய பொல்பிட்டிய, அத்துறுகிரிய – பாதுக்கை மற்றும் அத்துறுகிரிய – கொலன்னாவ பரிமாற்ற வரிசைகளின் நிர்மாணம் தொடர்பான பௌதீக செயன்முன்னேற்றம் காணி சுவீகரிப்பு தொடர்பாக பொதுமக்களால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டமை மற்றும் சுவீகரிப்பு நடைமுறையின் கீழ் நட்ட ஈட்டை கொடுப்பனவு செய்வதில் தாமதங்கள் ஆகியன காரணமாக 95 சதவீத எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றத்திற்கு குறைவாக 86 சதவீதம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. | அக்கறையுடையோரிற்கு குறித்துரைக்கப்பட்ட நலன்கள் காலரீதியாக பெறப்படாது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | தாமதம் அல்லது எதிர்ப்பை தவிர்ப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணி சுவீகரிப்பு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| பொதி 3 – லொட் ஆ | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 220 புதிய பொல்பிட்டிய மின்கட்டமைப்பு உபநிலைய நிர்மாணம், பாதுக்கை மினகட்டமைப்பு உபநிலையம் மற்றும் பன்னிப்பிட்டிய மின்கட்டமைப்பு உபநிலையத்தின் மேம்படுத்தல் ஆகியவற்றின் கீழான வேலைகள் 2020 பெப்ரவரி 29 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. புதிய பொல்பிட்டியவிலிருந்து 69.20 கிலோமீற்றர் தூரத்திற்கு பரிமாற்ற வரிசைகளை இடுதலின் கீழான வேலை பொதுமக்களிடமிருந்தான எதிர்ப்பு காரணமாக 2019 யூன் 30 இல் உள்ளவாறு அடையப்பட வேண்டிய 100 சதவீத எதிர்பார்க்கப்பட்ட இலக்கிற்கு குறைவாக 99.6 சதவீதத்தில் காணப்பட்டது. | அக்கறையுடையோரிற்கு குறித்துரைக்கப்பட்ட நலன்கள் காலரீதியாக பெறப்படாது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | தாமதம் அல்லது எதிர்ப்பை தவிர்ப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணி சுவீகரிப்பு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 29 இன் பிஈடி 03/2016 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக செயற்திட்டம் அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 41,072,974 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியினை (பிஏவைஈ) செலுத்தியிருந்தது. | தேவையற்றவாறு செயற்திட்டக் கிரயம் அதிகரிக்கின்றது. | சீஈபீயின் கொள்கைக்கிணங்க இச் செயற்திட்டத்தின் ஊழியர்களிற்கு பிஏவைஈ செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து பிஏவைஈ வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| (ஆ) | சீஈபீ இற்கு ஒப்பந்ததாரரால் கையளிக்கப்பட்டிருந்த பின்வரும் வாகனங்கள் செயற்திட்டத்தின் பகுதி 01 (லொட் - அ) இன் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனம், பொறி மற்றும் உபகரணத் தொகை நிதிக்கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரால் கையளிக்கப்பட்ட வாகனங்கள் சீஈபீயின் கணக்குப் புத்தகங்களிற்கு பின்வருமாறு எடுக்கப்பட்டிருந்தன. நிலவிய கொவிட் - 19 நிலைமை மற்றும் பௌதீக மெய்மையாய்வு செயன்முறை காரணமாக கணக்குப் புத்தகங்களிற்கு எடுப்பதில் தாமதமொன்று காணப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படும் நேரத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| வாகன பதிவு இல. | சீஈபீ இற்கு மாற்றப்பட்ட திகதி |
|---|---|
| டபிள்யூபி பிஜீ 0696 | 2020-01-30 |
| டபிள்யூபி பிஜீ 0698 | 2020-01-30 |
| டபிள்யூபி பிஜீ 0700 | 2019-12-24 |
| டபிள்யூபி சீஏஜ 6465 | 2020-01-22 |
| டபிள்யூபி சீஏஎச் 3948 | 2019-12-24 |

| வாகன பதிவு இல. | சீஈபீ இற்கு மாற்றப்பட்டமை | சீஈபீயின் கணக்குப் புத்தகங்களிற்கு பதியப்பட்டமை |
|---|---|---|
| டபிள்யூ பி பிஜீ 0696 | 2020.01.30 | 2020.06.01 |
| டபிள்யூ பி பிஜீ 0698 | 2020.01.30 | 2020.06.01 |
| டபிள்யூ பி பிஜீ 0700 | 2019.12.24 | 2020.06.01 |
| டபிள்யூ பி சீஏஜ 6465 | 2020.01.22 | 2020.06.01 |
| டபிள்யூ பி சீஏஎச் 3948 | 2019.12.24 | 2020.06.01 |